**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 79/2021</u>**

பெயர் : அறிவழகன் P.W.1. Cross

த/பெ. : முருகையா பிள்ளை

தேதி : 02.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாத்தா 1974 அன்று எனக்கு பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார். அதை பதிவு செய்து தரும்படி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் மாமா முறை ஆவார்கள். எனது தாத்தா எனக்கு எழுதிவைத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

2. வாசாஆ 2 ஆன உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எனது தாத்தா முனுசாமி தான் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். வாசாஆ 2 ஆன உயில் ஆவணத்தை எழுதிவைத்த தாத்தா எனது தாயாரின் தந்தை ஆவார். 1972ம் ஆண்டு எனது தாத்தா அவரது வாரிசுகளுக்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் யார் யாருக்கு எந்தெந்த சொத்துகள் கொடுக்கப்பட்டுள்ளது என அதன் புல எண்களும், அளவுகளும் குறிப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் செல்வாம்பாள் கடந்த 2007ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தாயார் 9ம் வகுப்பு வரை படித்துள்ளார்.

3. 1972ம் ஆண்டு எழுதிவைத்த உயில் ஆவணத்தை எனது தாத்தா ரத்து செய்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1974 ம் ஆண்டு தரங்கம்பாடி தாலுக்கா எந்த மாவட்டத்தில் இருந்தது என்றால் நாகப்பட்டிணம் மாவட்டத்தில் இருந்தது. வாசாஆ 2 ஆன ஆவணத்தில் தஞ்சை மாவட்டம் என குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். முனுசாமி எனக்கு எழுதிவைத்த உயில் ஆவணத்தை நான் எப்போது பார்த்தேன் என்றால் 2009ம் ஆண்டு பார்த்தேன். எனது தாத்தா முனுசாமி எப்போது இறந்தார் என்றால் 1984ம் ஆண்டு இறந்தார். அதற்கு முன்பு அவர் நல்ல நிலையில் இருத்தாரா என்றால் இருந்தார். முனுசாமியின் மனைவி பெயர் அஞ்சுகத்தம்மாள் ஆகும். அவர் 1992ம் ஆண்டு இறந்தார்.

4. வாசாஆ 2 ஆன உயில் ஆவணம் எழுதிவைத்த காலத்தில் முனுசாமி எங்கு வசித்து வந்தார் என்றால் எண். 3/220, ராஜாஜி தெரு, செம்பனார்கோவில் என்ற முகவரியில் வசித்து வந்தார். வாசாஆ 2 ஆன ஆவணத்தில் முனுசாமியின் ஈம கிரியை சடங்குகளை அவரது மகன்கள் தான் செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவர்கள் தான் முனுசாமியின் இறுதி சடங்குகளை செய்தார்கள் என்றால் சரிதான். வாசாஆ 2 ஆன உயில் ஆவணத்தில் சாட்சி அஞ்சுகம் என்பவரின் விலாசம் ரயிலடி தெரு, பரசலூர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா ஆங்கிலத்தில் தான் கையெழுத்து செய்வார் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆன ஆவணத்தில் எனது தாத்தாவின் கையொப்பம் அடித்தல் திருத்தல் இல்லாமல் தெளிவாக உள்ளது என்றால் சரிதான். வாசாஆ 2 ஆன ஆவணத்தில் எனது தாத்தாவின் கையொப்பம் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. வாசாஆ 2 ஆன ஆவணத்தில் உள்ள கையொப்பம் முனுசாமியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 2 ஆன ஆவணத்தில் செல்வாம்பாள் என்பவரது பெயரும் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் M என்ற எழுத்து மட்டும் இரண்டு முறை எழுதப்பட்டுள்ளது. வாசாஆ 2 ஆன ஆவணத்தில் உள்ள முனுசாமியின் கையொப்பத்தில் S என்ற எழுத்து மட்டும் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1 ஆன ஆவணத்தில் முனுசாமியின் கையொப்பம் தெளிவாக உள்ளது என்றாலும், வாசாஆ 2 ஆன ஆவணத்தில் உள்ள முனுசாமியின் கையொப்பம் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றாலும், உண்மையிலேயே முனுசாமி கையொப்பம் செய்திருந்தால் அந்த கையொப்பத்தை திருத்தி எழுத வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

6. 3ம் பிரதிவாதி எந்த தேதியில் நிலத்தை வாங்க வந்தவர்களை தடுத்து நிறுத்தினார்கள் என்றால் அவர் எந்த தொந்தரவும் செய்யவில்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின்வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**